**<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்.</u>**

**<u>O.S. No. 166/2021</u>**

**<u>நாள்.24.02.2026</u>**

**<u>பி.வா.சா. 1- முருகேசன்</u>**

**<u>வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

பட்டா கேட்டு எங்கள் தரப்புக்கு வழங்கப்பட்ட மெமோவின் படி பட்டா தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனது வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். நான் 3 வது தபசில் கட்டுமானமாக காட்டியுள்ள பகுதி சர்வே எண்.297/2J ல் உள்ளது என்றால் சரிதான். நான் 3 வது தபசில் கட்டுமானமாக காட்டியுள்ள பகுதியான சர்வே எண்.297/2J ல் கட்டுமானம் உள்ள பகுதி தவிர தெற்கு பக்கம் தொடர்ச்சியாகவும், வடக்கு பக்கம் தொடர்ச்சியாகவும் காலிமனையாக உள்ளது என்றால் சரிதான். நான் நீதிமன்றத்திற்கு வந்து சாட்சி சொல்லி போனபிறகு, 3 வது தபசில் கட்டுமானமாக காட்டியுள்ள பகுதியான சர்வே எண்.297/2J ல் வடக்கு பக்கம் தொடர்ச்சியாகவும் காலிமனையாக உள்ள பகுதியில் தண்ணீர் குழாய் பைப்பினை பதித்தேன் அதனால் என் மீது வாதிகள் தரப்பில் சேர்ந்தமரம் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். சேர்ந்தமரம் காவல் நிலையத்தார் என்னை அழைத்து வழக்கு நடப்பதால் தண்ணீர் குழாய் பைப்பினை பதிக்கக்கூடாது என அறிவுறுத்தினார்கள் என்றால் அப்படி யாரும் சொல்லவில்லை. என்னிடம் காட்டப்படும் இருப்பது சர்வே எண்.297/2J ல் வடக்கு பக்கம் தொடர்ச்சியாக உள்ள பகுதியில் நான் குழாய் அமைக்க தோண்டிய பகுதி என்றால் சரியல்ல சர்வே எண்.297/2J க்கு கிழக்குப் பக்கம் தான் நான் குழாய் அமைக்க தோண்டினேன். வழக்கு மத்தியில் சர்வே எண்.297/2J ல் உள்ள பாதையை அழிமதி செய்ய வேண்டி குழாய் அமைக்க தோண்டினேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் பட்டா சர்வே எண்.297/2L1 மற்றும் L2 க்கான பட்டா என்றால் சரிதான். **<u>சாட்சி மேற்படி சர்வே எண்.297/2L1 மற்றும் L2 க்கான கணினி பட்டாவினை ( எண்ணம் - 2 ) ஒப்புக்கொண்டிருப்பதால் மேற்படி ஆவணம் வா.சா.ஆ.14 ஆக குறியீடு செய்யப்படுகிறது.</u>** சர்வே எண்.297/2L1 மற்றும் L2 ல் தான் எனக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் உண்டு என்றால் சரிதான்.

சர்வே எண்.297/2L1 யார் யார் பெயரில் பட்டா உள்ளது என்றால் மாரிமுத்து மகன் ஆறுமுகச்சாமி நாடார் மற்றும் பழனிச்சாமி மகன் ஆறுமுகச்சாமி பெயரில் உள்ளது. மாரிமுத்து மகன் ஆறுமுகச்சாமி நாடார் என்பது எனது தந்தை என்றால் சரிதான். பழனிச்சாமி மகன் ஆறுமுகச்சாமி என்பது எனது அண்ணன் மகனான 2 வது பிரதிவாதி என்றால் சரிதான். நான் 2 வது பிரதிவாதிக்காகவும் சேர்த்து தான் இந்த வழக்கில் சாட்சி சொல்கிறேன் என்றால் சரிதான். சர்வே எண்.297/2L1 3 வது தபசில் சொத்தான 297/2J க்கு கீழ்புறத்திலும், சர்வே எண்.297/2L2 க்கு மேல்புறத்திலும் உள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.297/2L2 பட்டா எனது பெயரில் உள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.297/2L1 மற்றும் L2 ல் கட்டப்பட்ட எனது வீட்டிற்கு 3 வது தபசில் கட்டுமானம் அமைந்துள்ள சர்வே எண். 297/2J வழியாக தென்புறத்தில் உள்ள காலிமனை வழியாகத்தான் மின் இணைப்பு கொண்டு வந்தேன் என்றால் சரிதான். சர்வே எண். 297/2J காலிமனை தவிர என் வீட்டிற்கு தென்புறம் உள்ள அனைத்து இடங்களும் வாதிக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். சர்வே எண். 297/2J எனக்கும் வாதிகளுக்கும் பாத்தியப்பட்ட பொதுப்பாதை என வழக்குப் போட்டுள்ளார் என்றால் சரிதான். சர்வே எண். 297/2J அரசுக்கு பாத்தியப்பட்ட இடம் கிடையாது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் எதிர்வழக்குரையில் 6 வது பத்தி மற்றும் நிரூபண வாக்குமூலம் பத்தி 5 ல், "வாதிகள் விவரித்துள்ள 2 வது தபசில் சொத்தையும், அதன் கீழ்புறம் உள்ள சொத்துக்களையும் வாதிகளும், வாதிகளின் முன்னோர்களும் வெகுகாலத்திற்கு முன்பே கிரையம் பெற்று தனிப்பட்ட முறையில் அனுபவம் செய்து வருகிறார்கள் " என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் மேற்கண்டவாறு வாதிகள் விவரித்துள்ள 2 வது தபசில் சொத்தையும், அதன் கீழ்புறம் உள்ள சொத்துக்களையும் வாதிகளும், வாதிகளின் முன்னோர்களும் வெகுகாலத்திற்கு முன்பே கிரையம் பெற்று தனிப்பட்ட முறையில் அனுபவம் செய்து வருகிறார்கள் என ஒப்புக்கொண்டபிறகு, அதற்கு மாறுபட்டு கட்சி செய்யமுடியாது என்றால் சரியல்ல.

3 வது தபசில் கட்டுமானத்திற்கு நேர் மேல்புறத்தில் கைலாச நாடார் சொத்து உள்ளது என்றால் சரிதான். மேற்படி கைலாச நாடார் மனைவி பெயர் செல்லம்மாள் என்றால் சரிதான். கைலாச நாடாருக்கு 2 மகன்கள் என்றால் சரியல்ல, 6 மகன்கள். கைலாச நாடார் மகன் கணேசன், ஆறுமுகச்சாமி என்பவர் உண்டு என்றால் சரிதான். கைலாச நாடார் மகன் ஆறுமுகச்சாமி தான் தற்போது கைலாச நாடார் சொத்தில் உள்ளார் என்றால் முன்பு இருந்தார் தற்போது இறந்துவிட்டார் அவரது மனைவி தான் தற்போது இருக்கிறார். என்னிடம் காட்டப்படும் ஆவணம் மேற்படி கைலாச நாடார் மனைவி செல்லம்மாள், 1991 ல் அவரது மகனான கணேசனுக்கு எழுதிக்கொடுத்த நன்கொடை ஆவணம் என்றால் பொடி எழுத்தாக இருப்பதால் என்னால் படிக்க முடியவில்லை நான் கண் கண்ணாடி எடுத்து வராததால் என்னால் ஆவணத்தை படிக்க முடியவில்லை.

**சாட்சியிடம் கண் கண்ணாடி எடுத்து வரும்படி அறிவுறுத்தப்பட்டு குறுக்கு விசாரணை நிறுத்தி வைக்கப்பட்டு வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.02.24 17:59:34 +0530